TNNG020040632020

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நாகப்பட்டினம்.

**முன்னிலை. திரு. கோ. கிருஷ்ணன், பி.ஏ., எல்எல்.பி.,**

தலைமை நீதித்துறை நடுவர், நாகப்பட்டினம்.

2026ம் ஆண்டு ஜூலை திங்கள் 10ம் தேதி வெள்ளிக்கிழமை

(திருவள்ளுவர் ஆண்டு 2057 ஸ்ரீ பராபவ வருடம் ஆனி மாதம் 26ம் நாள்)

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.466/2020**

## CNR.No:TNNG02-004063-2020

| | | |
|---|---|---|
| 1 | குற்றமுறையீட்டாளர் பெயர் | அரசுக்காக, காவல் ஆய்வாளர்,<br>நாகூர் காவல் நிலைய<br>குற்ற எண்.344/2018. |
| 2 | எதிரி | சபரிநாதன், ஆ/வ.29/2019,<br>த/பெ. தங்கராஜ்,<br>எண்.1/691, தெற்குத்தெரு,<br>கீச்சாங்குப்பம், நாகப்பட்டினம். |
| 3 | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | கடந்த 15.10.2018 ஆம் தேதி எதிரி கைது செய்யப்பட்டுள்ளார். |
| 4 | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | நாகப்பட்டினம் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தின் Crl.M.P. No.5582/2018ல் கடந்த 15.10.2018 ஆம் தேதிய உத்தரவுபடி பிணையில் எதிரியை விடுவித்துள்ளனர். |
| 5 | இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் மற்றும் ஆண்டுப்பட்டிகை வழக்காக கோப்பிற்கு எடுக்கப்பட்ட | கடந்த 27.01.2020 ஆம் தேதி நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றம், நாகப்பட்டினத்தில் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, |

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.10 17:29:09 +0530

| | | |
|---|---|---|
| | நாள் | மேற்படி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் CC.No.466/2020 ஆக கடந்த 25.08.2020 ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. |
| 6 | நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம் நாகப்பட்டினத்தில் இருந்து, இந்நீதிமன்றத்திற்கு வழக்கு அனுப்பி வைக்கப்பட்ட மற்றும் பெறப்பட்ட நாள் | மேற்படி நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்திலிருந்து, u/s. 410 of Cr.P.C./ u/s. 450 of BNSS, 2023ன் படி இந்நீதிமன்றத்தால் Withdraw செய்து, கடந்த 24.10.2025 ஆம் தேதி பெறப்பட்டது. |
| 7 | u/s. 263 of BNSS, 2023ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து எதிரியிடம் கேட்கப்பட்ட நாள் | எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள், இதச பிரிவுகள் 279, 304(A)ன் கீழான குற்றச்சாட்டுக்கள் என்பதால், குற்றச்சாட்டுக்கள் தனியாக வனைந்து வினாவப்படவில்லை. மேற்படி குற்றச்சாட்டுக்களின் சாராம்சங்கள் குறித்து மட்டுமே எதிரியிடம் இந்நீதிமன்றத்தில், கடந்த 20.12.2025 ஆம் தேதி எடுத்துக்கூறி விளக்கி வினாவப்பட்டது. |
| 8 | வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் | இல்லை. |
| 9 | எதிரியின் கோரிக்கை | பொய் வழக்கு. குற்றவாளி இல்லை. |
| 10 | இவ்வழக்கில் குவிமுச. பிரிவு 317ன் கீழான மனுக்கள் நீங்கலாக இதர தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மற்றும் அவைகள் மீதான உத்தரவு, அது சம்பந்தமான மேல் முறையீட்டு உத்தரவு | இல்லை. |

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.10 17:29:15 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | இவ்வழக்கில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளின் நாள் விபரம் | அரசு தரப்பு/ எதிரிகள் தரப்பு சாட்சிகள் | முதல் விசாரணை நாள் | குறுக்கு விசாரணை நாள் |
| | | அ.சா.1 | 13.02.2026 | 13.02.2026 |
| | | அ.சா.2 | 13.02.2026 | 13.02.2026 |
| | | அ.சா.3 | 11.05.2026 | 11.05.2026 |
| | | அ.சா.4 | 11.05.2026 | 11.05.2026 |
| | | அ.சா.5 | 11.05.2026 | 11.05.2026 |
| | | அ.சா.6 | 01.06.2026 | 01.06.2026 |
| | | அ.சா.7 | 01.06.2026 | 01.06.2026 |
| | | அ.சா.8 | 03.06.2026 | 03.06.2026 |
| | | அ.சா.9 | 06.07.2026 | 06.07.2026 |
| 12 | நீதிமன்றத்தின் முடிவு | முடிவில், இவ்வழக்கு எதிரியை இதச பிரிவுகள் 279, 304(A)ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானிக்கப்பட்டது. | | |
| 13 | தீர்ப்புரை | இவ்வழக்கு எதிரியை இதச பிரிவுகள் 279, 304(A)ன் கீழான குற்றச்சாட்டுக்களில் இருந்து, u/s. 255 (1) of Cr.P.C. / u/s. 278(1) of BNSS, 2023ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்பட்டது. | | |
| 14 | வழக்கு சொத்து குறித்த உத்தரவு | இவ்வழக்கு சம்பந்தமாக வழக்குச் சொத்துக்கள் எதுவும் ஆஜர் செய்யப்படவில்லை. எனவே, வழக்குச் சொத்துப்பற்றி உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. | | |

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.10 17:29:32 +0530

இந்த ஆண்டுப்பட்டிகை வழக்கு இந்நீதிமன்றம் முன்பாக இன்று 10.07.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த கூடுதல் குற்றத்துறை அரசு வழக்கறிஞர் திரு. S. சரவணன் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M. தினேஷ்குமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு, சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில், இன்றே இந்நீதிமன்றம் இறுதியாக வழங்கிடும் ...

<u>**தீர்ப்புரை**</u>

கடந்த 06.10.2018 ஆம் தேதி மாலை சுமார் 03.30 மணியளவில், இவ்வழக்கின் நிகழ்நிலைப் புகார்தாரர் ராமனின் அம்மாவான வசந்தா என்பவர் தனது வீட்டிற்கு மளிகை சாமான்கள் வாங்கிக்கொண்டு, நாகூர் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட, நாகூர் மெயின்ரோடு, மரைக்கார் லாட்ஜ் முன்பு ரோட்டின் இடதுபுற ஓரமாக, வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது இவ்வழக்கின் எதிரி PY-02 Q-5304 என்ற பதிவெண்கொண்ட யமஹா இருசக்கர வாகனத்தை வடக்கிலிருந்து தெற்கு நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும், மனித உயிர்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் ஓட்டி வந்து, மேற்படி வசந்தா மீது மோதி அவருக்கு இறப்பை ஏற்படுத்தியுள்ளார். எனவே, இவ்வழக்கின் எதிரியானவர் இதச பிரிவுகள் 279, 304(A)ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக சொல்லி, நாகூர் காவல் நிலைய

G KRISHNAN
Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.10 17:29:39 +0530

காவல் ஆய்வாளர், கடந்த 27.01.2020 ஆம் தேதி நாகப்பட்டினம், நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில், இவ்வழக்கின் குற்ற அறிக்கையை தாக்கல் செய்துள்ளார். அதனை பார்வையிட்டு பரிசீலனை செய்து, மேற்படி நீதித்துறை நடுவர் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.466/2020 ஆக கடந்த 25.08.2020 ஆம் தேதி கோப்பிற்கு எடுத்துள்ளார்.

2. மேற்படி நீதிமன்றத்தில் அழைப்பாணை அடிப்படையில், ஆஜரான இவ்வழக்கின் எதிரிக்கு, இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச. பிரிவு 207 / u/s.230 of BNSS, 2023ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில், எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து எதிரியிடம் வினாவுவதற்காக, இவ்வழக்கு நிலுவையில் இருந்துள்ளது. இந்நிலையில், இவ்வழக்கானது மேற்படி நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்திலிருந்து, u/s. 410 of Cr.P.C. / u/s.450 of BNSS, 2023ன் படி இந்நீதிமன்றத்தால் Withdraw செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து இவ்வழக்கு கோப்பு இந்நீதிமன்றத்திற்கு, மேற்படி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டு, கடந்த 24.10.2025 ஆம் தேதி இந்நீதிமன்றத்தால் பெறப்பட்டது.

3. அதன்பின்னர், இந்நீதிமன்றத்தில் அழைப்பாணை அடிப்படையில், ஆஜரான இவ்வழக்கின் எதிரிக்கு போதிய கால அவகாசம் கொடுத்து இவ்வழக்கு எதிரியிடம் அவருக்கு எதிராக சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 279, 304(ஏ)ன் கீழான

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.07.10 17:29:47 +0530

குற்றச்சாட்டுக்களின் சாராம்சங்கள் குறித்தும், அவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கின் குற்ற அறிக்கை குறித்தும், கடந்த 20.12.2025 ஆம் தேதி, தமிழில் எடுத்துக்கூறி விளக்கி வினாவி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அப்போது இவ்வழக்கின் எதிரி, **"விபத்தில் இறந்துபோன அம்மாதான் சாலையின் குறுக்கே வந்து நான் மெதுவாக ஓட்டிவந்த, இருசக்கர வாகனத்தில் மோதிவிட்டார். அதை மறைத்து, என் மீது இந்த பொய் வழக்கை போட்டுள்ளார்கள்".** நான் குற்றவாளி இல்லை என சொல்லி, குற்றச்சாட்டுக்களை மறுத்து, வழக்கு விசாரணைக்கு வேண்டினார். அதனடிப்படையில் அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டது.

4. இவ்வழக்கில் அரசுத்தரப்பில் அசா.1 முதல் 9 வரையிலான சாட்சிகளை முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்டு, அவர்கள் மூலம் அசாஆ.1 முதல் 7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.

5. **அரசு தரப்பில் சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் முன்வைக்கப்பட்ட வழக்கின் சுருக்கம் பின்வருமாறு :**

5 (1). கடந்த 06.10.2018 ஆம் தேதி மாலை சுமார் 03.30 மணியளவில், அசா.1 திரு. ராமன் மற்றும் அசா.2 திரு. ரவீந்தர் ஆகியோர்களின் தாயாரான திருமதி. வசந்தா என்பவர், தனது வீட்டிற்கு மளிகை சாமான்கள் வாங்கிக்கொண்டு, நாகூர்

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.07.10 17:29:53 +0530

காவல்நிலைய எல்லைக்குட்பட்ட, நாகூர் மெயின்ரோடு, மரைக்கார் லாட்ஜ் முன்பு ரோட்டின் இடதுபுற ஓரமாக, வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நடந்து வந்து கொண்டிருந்துள்ளார். அப்போது அதே திசையில் அவருக்கு பின்னால், இவ்வழக்கின் எதிரி PY-02 Q-5304 என்ற பதிவெண்கொண்ட யமஹா இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும், மனித உயிர்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் ஓட்டி வந்து, மேற்படி வசந்தா மீது மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளார்.

5 (2). அந்த சமயத்தில் நாகூர் பீச்சில் ஆட்டோ ஓட்டிக்கொண்டிருந்த மேற்படி அசா.1க்கும், வீட்டிலிருந்த மேற்படி அசா.2க்கும், அவர்களின் நண்பரான **அப்துல் ரஹ்மான்** என்பவர் மேற்படி விபத்து குறித்து போன் செய்து தகவல் சொல்லியுள்ளார். உடனடியாக அசா.1 சம்பவ இடம் வந்து தலைமுடி அறுந்த நிலையில், தலையில் பலத்த காயமுற்றிருந்த தனது அம்மாவை பார்த்துள்ளார். பின்னர் அசா.1, தன்னுடைய ஆட்டோவிலேயே, தனது தம்பி **லெட்சுமணனுடன்** சேர்ந்து, தனது அம்மாவை நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் கொண்டுபோய் சேர்த்துள்ளார். அங்கு முதலுதவி சிகிச்சை அளித்துவிட்டு, மேல் சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளார்கள். மேற்படி மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி, விபத்து ஏற்பட்ட அன்றே மாலை சுமார் 06.20 மணியளவில், அசா.1றின் தாயார் இறந்துள்ளார்.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.10 17:30:02 +0530

5 (3). பின்னர் அசா.1, தனது நண்பரான ரவிச்சந்திரன் என்பவருடன் நாகூர் காவல் நிலையம் வந்து, கடந்த 06.10.2018 ஆம் தேதி இரவு 10.00 மணியளவில், மேற்படி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியிலிருந்த, அசா.8 திரு. மோகன் என்பவரிடம் அசாஆ.1 ஆன எழுத்துமூலமான புகாரினை கொடுத்துள்ளார். மேற்படி புகாரினை பெற்ற அசா.8, அதனடிப்படையில், நாகூர் காவல் நிலைய குற்ற எண் 344/2018, இதச பிரிவுகள் 279, 304(A)ன் கீழ் அசாஆ.2 ஆன இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளார். பின்பு இவ்வழக்கு கோப்பினை, கடந்த 06.10.2018 ஆம் தேதி மேற்படி காவல் நிலையத்தின் காவல் ஆய்வாளராக கூடுதல் பொறுப்பு வகித்து வந்த ,நாகப்பட்டினம் நகர காவல் நிலைய ஆய்வாளரான அசா.9 திரு. செந்தில்குமார் அவர்களிடம் அசா.8 புலன்விசாரணைக்காக ஒப்படைத்தார்.

5 (4). அசா.9 இவ்வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்காக பெற்றுக்கொண்டு, கடந்த 07.10.2018ம் தேதி காலை 06.00 மணியளவில், சம்பவ இடம் சென்று, அங்கிருந்த சாட்சிகளான அசா.7 திரு. ஸ்ரீதர் மற்றும் பட்டியல் சாட்சி திரு. வெங்கடேசன் ஆகியோர்கள் முன்னிலையில், சம்பவ இடத்தை பார்வையிட்டு, அசாஆ.3 ஆன பார்வை மகசர் மற்றும் அசாஆ.4 ஆன மாதிரி வரைபடத்தினை தயார் செய்துள்ளார். மேற்படி பார்வை மகசரில் மேற்படி சாட்சிகளிடம் அசா.9 சாட்சி கையொப்பங்கள் பெற்றுள்ளார். பின்னர் சாட்சிகளை விசாரணை செய்து அசா.9 வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.10 17:30:08 +0530

5 (5). தொடர்ந்து, இந்த விபத்தில் இறந்துபோன வசந்தா பெ/வ. 50 க/பெ. தர்மலிங்கம் என்பவரின் பிரேதத்தின் மீது, திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து, கடந்த 07.10.2018ம் தேதி அன்றே காலை சுமார் 11.00 மணிமுதல் பகல் 12.00 மணிவரை, பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் அசா.9 விசாரணை செய்து, அசாஆ.5 ஆன பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். மேற்படி பிரேத விசாரணை அறிக்கையில், மேற்படி சாட்சிகளிடம் அசா.9 கையொப்பங்கள் பெற்றுள்ளார். பிரேத விசாரணை அறிக்கை சாட்சிகளை அசா.9 விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5 (6). மேற்படி வசந்தாவின் பிரேதத்தினை சடலகூராய்வு செய்யவேண்டி, தக்க வேண்டுகோள் கடிதத்தினை காவலர் 981 திரு. முருகன் என்பவர் மூலம், மேற்படி மருத்துவமனை மருத்துவரிடம் அசா.9 ஒப்படைத்துள்ளார். பிரேத பரிசோதனைக்கு பின்னர், அசா.9தின் உத்தரவுப்படி, வசந்தாவின் பிரேதத்தினை நல்லடக்கம் செய்யவேண்டி அவரது உறவினர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

5 (7). தொடர்ந்து கடந்த 15.10.2018ம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில், நாகூர் காவல் நிலையம் ஆஜராகி இருந்த இவ்வழக்கின் எதிரியை, காரணங்கள் கூறி நாகூர் காவல் நிலையத்தில் வைத்து அசா.9 கைது செய்துள்ளார். அன்று இவ்வழக்கின் எதிரியை நீதிமன்ற காவலுக்கு அசா.9 அனுப்பி வைத்துள்ளார். பின்னர் நாகூர் காவல் நிலைய ஆய்வாளர் திரு. இராதாகிருஷ்ணன் என்பவர் பணிக்கு வந்துவிட்டதால், அவரிடம் இவ்வழக்கு கோப்பினை அசா.9 ஒப்படைத்துள்ளார்.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.10 17:30:15 +0530

5 (8). தொடர் புலன் விசாரணைக்காக இவ்வழக்கு கோப்பினை பெற்றுக்கொண்ட மேற்படி காவல் ஆய்வாளர் திரு. ராதாகிருஷ்ணன், இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட PY 02 Q 5304 என்ற எமஹா இருசக்கர வாகனத்தை, கடந்த 25.10.2018ம் தேதி தக்க வேண்டுகோள் கடிதத்துடன் நாகப்பட்டினம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்விற்காக உட்படுத்தியுள்ளார். அது சம்மந்தமாக மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.கருப்புசாமி என்பவரை, அன்றே மேற்படி காவல் ஆய்வாளர் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அப்போது மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர், இந்த விபத்தானது மேற்படி இருசக்கர வாகனத்தின் இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை என கருத்து தெரிவித்து, அசாஆ.6 ஆன மோட்டார் வாகன ஆய்வறிக்கையை வழங்கியுள்ளார்.

5 (9). இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த, அசா.8 ஆன சிறப்பு உதவி ஆய்வாளர் மோகன் என்பவரையும், மேற்படி காவல் ஆய்வாளர் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இந்த விபத்தில் இறந்துபோன வசந்தாவின் பிரேதத்தின் மீது சடல கூராய்வு மேற்கொண்ட, திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர் திரு. அருண்குமார் என்பவரையும், மேற்படி காவல் ஆய்வாளர் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் மற்றும் மேற்படி மருத்துவர் வழங்கிய அசாஆ.7 ஆன சடலகூராய்வு அறிக்கையையும் பெற்றுள்ளார்.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.10 17:30:22 +0530

வழக்கின் புலன் விசாரணை முடித்து, இவ்வழக்கின் குற்ற அறிக்கையை மேற்படி காவல் ஆய்வாளர் திரு. ராதாகிருஷ்ணனே தாக்கல் செய்துள்ளார்.

5 (10). மேற்படி காவல் ஆய்வாளர் திரு. ராதாகிருஷ்ணன் இவ்வழக்கின் தொடர்புலன் விசாரணை மேற்கொண்டது சம்பந்தமாகவும், இவ்வழக்கின் குற்ற அறிக்கை தாக்கல் செய்தது சம்பந்தமாகவும், அசா.9தே ஆவணங்களை பார்த்து சாட்சியமளித்துள்ளார்.

5 (11). சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லி, அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட, அசா.3 திரு. சந்துரு, அசா.4 திரு. சேகர், அசா.5 திரு. சுஜய் மற்றும் அசா.6 திரு. வீரசெல்வன் ஆகியோர்களுக்கு இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. இவ்வழக்கு எதிரியையும் யார் என்று தெரியாது. அவர்களை போலீசார் எதுவும் விசாரிக்கவில்லை. மேலும் அசா.5 மற்றும் 6க்கு இந்த விபத்தில் காயம்பட்டு இறந்துபோன வசந்தாவையும் தெரியாது. பார்வை மகசர் சாட்சியாக அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட, அசா.7 திரு. ஸ்ரீதருக்கும், இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. அவர் இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் கேள்விப்படவும் இல்லை. போலீசார் அவரை விசாரிக்கவும் இல்லை. அசாஆ.3 ஆன பார்வை மகசரில் உள்ள சாட்சி கையெழுத்துக்கள் எதுவும் அவருடையதில்லை.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.10 17:30:29 +0530

5 (12). மேற்சொல்லப்பட்டவாறு அசா.3 முதல் 7 வரையிலான சாட்சியங்கள் அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்ததால், அவர்களை அரசுத்தரப்பில் பிறழ் சாட்சிகளாக அனுமதிக்கக்கோரப்பட்டது. அவ்வாறே அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில், மேற்படி சாட்சிகளை அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.

6. இத்துடன் அரசு தரப்பு சாட்சிய விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது. அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளில், இவ்வழக்கு எதிரிக்கு பாதகமாக அளிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் குறித்து, இன்று 10.07.2026 ஆம் தேதி குவிமுச. பிரிவு 313 (1) (b)ன் கீழ், இவ்வழக்கு எதிரியிடம் எடுத்துக்கூறி விளக்கி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அப்போது இவ்வழக்கின் எதிரி **"தனக்கு எதிராக கூறப்பட்ட அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியம் பொய். அசா.1 விபத்து ஏற்பட்டது சம்பந்தமாக அளித்த சாட்சியம் பொய். அவரின் அம்மாதான் திடீரென சாலையின் குறுக்கே வந்துவிட்டார். அசா.1 புகார் கொடுத்தது சம்பந்தமாக அவர் அளித்த சாட்சியமும் பொய். சம்பவம் நடந்த உடனேயே, போலீசார் சம்பவம் இடம் வந்து விசாரித்தார்கள். அதன்பின்பு, அதை மறைத்து புகாரை உருவாக்கியுள்ளார்கள். விபத்தில் அடிபட்ட அம்மாதான் நான் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் மீது திடீரென சாலையின் குறுக்கே வந்து மோதி விழுந்துவிட்டார். சம்பவம் நடந்த உடன் நாகூர் போலீசார் சம்பவ இடம் வந்து விசாரித்து தெரிந்துகொண்டார்கள். சம்பவ இடத்தில் இருந்து என்னை வண்டியுடன் அப்போதே காவல் நிலையம்**

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.10 17:30:37 +0530

**அழைத்துச்சென்றுவிட்டனர். அதையெல்லாம் மறைத்து என் மீது பொய் வழக்கு போட்டுள்ளனர். தனது தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை"** என தெரிவித்தார். எனவே, எதிரி தரப்பு சாட்சிய விசாரணை இல்லையென முடிக்கப்பட்டது. எதிரி தரப்பில் எந்தவித சாட்சிய, சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருள்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை. பின்னர் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

7. தற்போது தீர்வுக்குரிய விபரம் யாதெனில், எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களானது, அரசு தரப்பால் நியாயமான சந்தேகங்களுக்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா ? என்பதே ஆகும்.

8. **<u>தீர்வு :-</u>**

8 (1). அரசுத்தரப்பில், இதச பிரிவுகள் 279, 304(A)ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்கள் புரிந்துள்ளதாக சொல்லி, இவ்வழக்கின் எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளது. இவ்வழக்கின் எதிரியை இதச பிரிவு 279ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டும் என்றால், அரசுத்தரப்பில் சொல்லப்பட்டதுபோல, பொதுசாலையில் இவ்வழக்கின் எதிரி அதிவேகமாகவோ அல்லது அஜாக்கிரதையாகவோ, மனித உயிர்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் வாகனத்தை இயக்கினார் என்பதை அரசுத்தரப்பில் நிரூபணம் செய்யப்பட வேண்டும். மேலும், இ.த.ச பிரிவு 304 (A)ன் கீழ் இவ்வழக்கின் எதிரியை தண்டிக்கப்பட வேண்டும்

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.07.10 17:30:45 +0530

என்றால், கீழ்க்கண்ட நான்கினை அரசு தரப்பில் சந்தேகங்களுக்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட வேண்டும்.

i) விபத்து ஏற்பட்டு, அந்த விபத்தில் ஏற்பட்ட காயத்தினால் தான் அசா.1றின் அம்மாவான வசந்தா இறந்தார் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

ii) வாகனங்கள் சம்பந்தப்பட்ட விபத்தில் விபத்தானது விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தின் எந்தவித இயந்திர கோளாரினாலும் ஏற்படவில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

iii) விபத்தில் சம்பந்தப்பட்ட இருசக்கர வாகனத்தினை (offender vehicle) எதிரிதான் ஓட்டினார் என கண்ணுற்ற சாட்சியங்கள் மூலமோ அல்லது சூழ்நிலை சாட்சியங்கள் அதாவது விபத்திற்கு பின்னிட்டு எதிரியின் நடவடிக்கைகள் மூலமோ உறுதிப்படுத்தபட வேண்டும் மற்றும்,

iv) விபத்து சமயத்தில் எதிரி அதிவேகமாகவோ, அஜாக்கிரதையாகவோ அல்லது கவனக்குறைவாகவோ வாகனத்தை ஓட்டினார் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

8 (2). எதிரிதரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், இந்த வழக்கில் அரசுத்தரப்பில் சொல்லப்படும் PY 02 Q 5304 என்ற இருசக்கர வாகனம், இவ்விபத்தில் சம்பந்தப்பட்டுள்ளது என்பதும், இந்த விபத்தானது மேற்படி இருசக்கர வாகனத்தின் எந்தவித இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை என்பதும், விபத்தில் சம்பந்தப்பட்ட

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.10 17:30:53 +0530

மேற்படி இருசக்கர வாகனத்தை விபத்து சமயத்தில், இவ்வழக்கின் எதிரிதான் ஓட்டினார் என்பதும் மற்றும் இந்த விபத்து காயங்களினால்தான் அசா.1 மற்றும் 2டின் அம்மாவான சுமார் 50 வயதுடைய வசந்தா என்ற பெண்மணி இறந்துவிட்டார் என்பதும் உண்மைதான். ஆனால் இந்த விபத்தானது, அரசுத்தரப்பில் சொல்லப்படுவதுபோல ஏற்படவில்லை. இந்த விபத்திற்கு இவ்வழக்கின் எதிரி காரணமில்லை. இவ்வழக்கின் எதிரி இந்த விபத்தில் சம்பந்தப்பட்ட இருசக்கர வாகனத்தை, மெதுவாக, சாலை விதிகளை கடைபிடித்து, சாலையின் இடதுபுற ஓரமாக ஓட்டிச்சென்றார். அப்போது அசா.1 மற்றும் 2டின் வயதான தாயார்தான், மேற்படி இருசக்கர வாகனம் வருவதை கவனிக்காமல், திடீரென சாலையின் குறுக்கே வந்து, மேற்படி இருசக்கர வாகனத்தின் மீது மோதி, கீழே விழுந்து தலையில் பலத்தக்காயத்தை ஏற்படுத்திக்கொண்டார். இந்த விவரம் அப்போதே சம்பவ இடம் சென்று, நாகூர் காவல் நிலைய போலீசார் விசாரித்து தெரிந்துகொண்டுள்ளனர். அதுமட்டுமின்றி, மேற்கண்டவாறுதான் இவ்விபத்து ஏற்பட்டது என்பதை அசா.9 ஆன புலன் விசாரணை அதிகாரி விசாரித்தபோதே, சாட்சிகள் குவிமுச.பிரிவு 161(3)ன் படியான வாக்குமூலமாக சொல்லியுள்ளார்கள். அதனை அசா.9ம், தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார். இருந்தபோதும், அவைகளை எல்லாம் மறைத்து, இந்த விபத்தில் காயம்பட்டு இறந்துபோன நபரின் குடும்பத்திற்கு இழப்பீடு பெற்றுத்தர வேண்டி, இவ்விபத்திற்கு எதிரி காரணம் என்பதுபோல, புகார் உள்ளிட்ட ஆவணங்களை பின்னிட்டு தவறாக உருவாக்கி இந்த வழக்கினை போட்டுள்ளனர். இந்த விபத்து அசா.1 மற்றும் 2டின் வயதான தாயார், திடீரென சாலையின் குறுக்கே வந்ததால்தான் ஏற்பட்டது.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.10 17:31:04 +0530

மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் Senthilkumar Vs. The Station House Officer, Valavanur Police Station, Viluppuram District, 2017 (2) MWN(Cr.) 475 என்ற வழக்கில்,

> ***"When the pedestrian suddenly crosses the road, even though the vehicle was driven in a slow speed, it is difficult to control the vehicle in such a situation - merely because of fatal accident, rash and negligent driving cannot be inferred"***

என்று கூறப்பட்ட சட்ட நிலைப்பாடுபடி, மேற்கண்ட சூழ்நிலையில், இந்த விபத்திற்கு எதிரி காரணமாகமாட்டார். மேலும் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களானது அரசுத்தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை. எனவே, இவ்வழக்கின் எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என வாதிட்டு அதற்கு ஆதரவாக மேற்படி முன்தீர்ப்பினையும் சமர்ப்பித்தார்.

8 (3). இருதரப்பு வாதங்கள் அடிப்படையில் பார்த்தோமேயென்றால், அரசுத்தரப்பில் சொல்லப்படும் இருசக்கர வாகனம் இவ்விபத்தில் சம்பந்தப்பட்டுள்ளது, இந்த விபத்தானது, மேற்படி இருசக்கர வாகனத்தின் எந்தவித இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை, இந்த விபத்து காயங்களினால்தான் அசா.1 மற்றும் 2டின் தாயாரான திருமதி. வசந்தா என்ற 50 வயது பெண்மணி இறந்துவிட்டார், விபத்து சமயத்தில் இந்த விபத்தில் சம்பந்தப்பட்ட இருசக்கர வாகனத்தை இவ்வழக்கின்

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.10 17:31:11 +0530

எதிரிதான் ஓட்டினார் என்பவைகள் குறித்து இவ்வழக்கில், இருதரப்பிலும் மாறுபட்ட கருத்துக்கள் எதுவும் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது. மாறாக, இந்த வழக்கின் விபத்திற்கு யார் காரணம் ? என்பதே இருதரப்பிற்கு இடையே உள்ள மாறுபட்ட கருத்துக்கள் ஆகும்.

8 (4). எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை மெய்ப்பிக்க, அரசுத்தரப்பில் மொத்தம் 9 சாட்சியங்கள் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்டு, அவர்கள் மூலம் அசாஆ.1 முதல் 7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் அரசுத்தரப்பு வழக்குப்படி, அசா.1 மற்றும் 2 இந்த விபத்தில் காயம்பட்டு இறந்துபோன வசந்தாவின் மகன்கள். மேலும் அவர்கள் இந்தவிபத்து குறித்து கேள்விப்பட்ட சாட்சியங்கள். மேலும் அசா.1தான், அசாஆ.1 ஆன இவ்வழக்கின் புகாரினை கொடுத்தவர். அசா.3 முதல் 6 வரையிலான சாட்சியங்கள் இந்த விபத்தினை கண்ணுற்ற சாட்சியங்கள். அசா.7 இவ்வழக்கின் பார்வை மகசரில் சாட்சி கையொப்பமிட்டவர் மற்றும் இவ்வழக்கு சம்பவம் குறித்து கேள்விப்பட்டவர். அசா.8 ஆன சிறப்பு உதவி ஆய்வாளர், அசா.1 நாகூர் காவல் நிலையம் ஆஜராகி கொடுத்த அசாஆ.1 ஆன புகாரினை பெற்று, அசாஆ.2 ஆன இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தவர். அசா.9 ஆன காவல் ஆய்வாளர், அசா.8 பதிவு செய்த இவ்வழக்கு கோப்பினை பெற்று, எதிரியை கைது செய்தது வரை, இவ்வழக்கில் முதல் புலன் விசாரணையை மேற்கொண்ட புலன் விசாரணை அதிகாரி. மேலும் அவரே, இவ்வழக்கினை தொடர்புலன் விசாரணை மேற்கொண்டு, காவல் ஆய்வாளர்

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.07.10 17:31:19 +0530

திரு. ராதாகிருஷ்ணன் இவ்வழக்கின் குற்ற அறிக்கையை தாக்கல் செய்தது சம்பந்தமாக ஆவணங்களைப் பார்த்து சாட்சியமளித்தவர் ஆவார்.

8 (5). இந்த விபத்திற்கு யார் காரணம் ? என்பதே, இவ்வழக்கில் இருதரப்பிற்கு இடையே மாறுபட்ட கருத்துக்கள் ஆக உள்ளது. எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை மெய்ப்பிக்க, அசா.3 முதல் 6 வரையிலான சாட்சிகளை, சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லி, அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட மேற்படி சாட்சிகள், இந்த விபத்து சம்பவத்தை கண்ணுற்றதாகவோ, இந்த விபத்திற்கு எதிரிதான் காரணம் என்றோ, அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக இந்நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கவில்லை. மாறாக, தங்களுக்கு இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. இவ்வழக்கு எதிரியையும் யார் என்று தெரியாது. தங்களை போலீசார் விசாரிக்கவே இல்லை என அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார்கள். மேலும் அசா.5 மற்றும் 6, இந்த விபத்தில் இறந்துபோனதாக சொல்லப்படும் வசந்தாவையே தங்களுக்கு யார் என்று தெரியாது என அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார்கள்.

8 (6). அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட அசா.1 மற்றும் 2, இந்த விபத்தில் காயம்பட்டு இறந்துபோன வசந்தாவின் மகன்கள். அவர்கள்

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.07.10 17:31:26 +0530

இந்த விபத்தினை கண்ணுற்ற சாட்சிகள் இல்லை. அவர்களே இந்த விபத்தினை கேள்விப்பட்டோம் என்றுதான் தங்களது சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளனர்.

8 (7). இவ்வழக்கின் முதல் புலன் விசாரணை அதிகாரியான அசா.9, நான்தான் இந்த விபத்தில் காயம்பட்டு இறந்துபோன வசந்தாவின் பிரேதத்தை பார்வையிட்டு, பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் விசாரணை செய்து, அசாஆ.5 ஆன பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன் என தனது முதல் விசாரணையில் சாட்சியமளித்துள்ளார். மேற்படி பிரேத விசாரணை அறிக்கையை பரிசீலினிக்கையில், தலைமுடி அறுந்த நிலையில், மேற்படி வசந்தாவின் பிரேதம் காணப்பட்டதாக எந்தவித விவரங்களும் குறிப்பிடப்படவில்லை என்பது புலனாகின்றது. மேலும், அசா.9 தனது குறுக்கு விசாரணையில், **"இந்த விபத்தில் காயம்பட்டு இறந்துபோன வசந்தாவை நான் பார்த்த சமயத்தில், அவர் தலைமுடி அறுந்த நிலையில், காணப்பட்டதற்கான எந்தவித தடயங்களும் இல்லை. இந்த விபத்தில் காயம்பட்டு இறந்துபோன வசந்தாவின் மகன்களான அசா.1 மற்றும் 2, இந்த விபத்தினை கண்ணுற்ற சாட்சிகள் இல்லை**" என சாட்சியமளித்துள்ளார். ஆனால் அசா.1 மற்றும் 2, தாங்கள் பார்த்த சமயத்தில் தங்களது அம்மா வசந்தா தலைமுடி அறுந்த நிலையில், தலையில் பலத்த காயமுற்று இருந்தார் என மேற்படி சாட்சிய, சான்றாவணங்களுக்கு எதிராக சாட்சியமளித்துள்ளார்கள்.

8 (8). மேலும் அசா.9 தனது குறுக்கு விசாரணையில், **"அசா.1 மற்றும் 2ஐ நான்தான் விசாரணை செய்து அவர்களின் குவிமுச. பிரிவு 161(3)ன் படியான வாக்குமூலங்களை பதிவு செய்தேன். அந்த வாக்குமூலங்களில், அவர்களின் அம்மா**

G KRISHNAN
Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.10 17:31:32 +0530

**வசந்தாவின் தலைமுடி அவர்மீது மோதிய இருசக்கர வாகனத்தில் மாட்டிய பின்னரும், அந்த இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபர் வண்டியை நிறுத்தாமல் சிறிது தூரம் தர தரவென்று இழுத்து சென்றதாகவும், உடனடியாக அங்கிருந்தவர்கள் அதைப் பார்த்து அந்த வண்டி சக்கரத்தில் மாட்டியிருந்த அவர்களின் அம்மாவின் தலை முடியை கட் செய்ததாகவும் அங்கிருந்தவர்கள் கூறியதாகவும், சம்பவ இடம் சென்ற அவர்கள், அவர்கள் அம்மாவை தலை முடி அறுந்த நிலையில் பார்த்ததாகவும்"** சொல்லவில்லை என ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால் அசா.1 மற்றும் 2, மேற்கண்டவாறுதான் சம்பவம் நடந்தது என்று தங்களின் குவிமுச.பிரிவு 161(3)ன் படியான வாக்குமூலங்களில் சொல்லியுள்ளோம் என முதலில் சாட்சியமளித்தனர். பின்னிட்டு அவர்களே, மேற்கண்டவாறு சம்பவம் நடந்ததாக, மேற்படி வாக்குமூலங்களில் சொல்லவில்லை என்றும், ஒன்றுக்கொன்று முரண்பட்ட வகையில் சாட்சியமளத்துள்ளார்கள்.

8 (9). இவ்வழக்கின் புகாரினை பெற்று, முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ததாக சொல்லப்படும் அசா.8ம், தனது குறுக்கு விசாரணையில், **"அசா.1 கொடுத்ததாக சொல்லப்படும் அசாஆ.1 ஆன புகாரில், விபத்து ஏற்படுத்திய நபர், விபத்து சமயத்தில் குடிபோதையில் நிதானம் இன்றி இருந்ததாகவோ, அசா.1றின் தாயாரின் தலைமுடி இருசக்கர வாகனத்தில் மாட்டியப் பின்னரும், இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபர் வண்டியை நிறுத்தாமல் சிறிது தூரம் தர தரவென்று இழுத்து சென்றதாகவும், உடனடியாக அங்கிருந்தவர்கள் அதைப் பார்த்து அந்த வண்டி சக்கரத்தில் மாட்டியிருந்த அசா.1றின் அம்மாவின் தலைமுடியை கட் செய்ததாகவும்**

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.07.10 17:31:39 +0530

**கூறப்படவில்லை**" என ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் அசா.8டே, **"மேற்கண்டவாறு இவ்வழக்கு சம்பவம் நடந்ததாகவே தெரியவரவில்லை"** என அவராகவே இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார். அசா.1 கொடுத்ததாக சொல்லப்படும் அசாஆ.1 ஆன இவ்வழக்கின் புகாரிலும், மேற்கண்டவாறு சம்பவம் நடந்ததாக சொல்லப்படவில்லை. ஆனால் அசாஆ. 1 ஆன புகாரினை நான்தான் கொடுத்தேன் என ஒப்புக்கொள்ளும் அசா.1, மேற்கண்டவாறு சம்பவம் நடந்ததாக நான் கொடுத்த அசாஆ.1 ஆன புகாரில் சொல்லியுள்ளேன் என மேற்படி சாட்சிய, சான்றாவணங்களுக்கு எதிராக சாட்சியமளித்துள்ளார்.

8 (10). மேலும் அசா.1 மற்றும் 2, மேற்கண்டவாறு சம்பவம் நடந்ததாக, தங்களுக்கு தங்களது நண்பரான அப்துல் ரஹ்மான் என்பவர்தான் போன் மூலம் தகவல் சொன்னார் என இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்துள்ளார்கள். மேற்கண்ட சூழ்நிலையில், மேற்கண்ட அப்துல் ரஹ்மான் யார் ?, அவருக்கு இந்த விபத்து குறித்து எப்படி தெரிந்தது ? என்பதை உறுதிப்படுத்தவும், அசா.1 மற்றும் 2 சாட்சியமளித்ததுபோல, அவர்களுக்கு மேற்படி அப்துல் ரஹ்மான்தான் மேற்படி விபத்து குறித்து தகவல் சொன்னார் என்பதை உறுதிப்படுத்தவும், அவரை சாட்சியாக அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்படவில்லை.

8 (11). மேலும் அசா.1 சாட்சியமளித்ததுபோல், அவர்தான் சம்பவ இடத்தில் இருந்து அவரது அம்மாவை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டுபோய் சேர்த்தார்

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.10 17:31:46 +0530

என்பதை உறுதிப்படுத்தவும், அசா.1 மற்றும் 2 சாட்சியமளித்ததுபோல, இந்த விபத்தினால், அவர்களின் தாயாரின் தலைமுடி அறுக்கப்பட்ட நிலையில்தான் அவரை மருத்துவமனைக்கு கொண்டுபோய் சேர்க்கப்பட்டார் என்பதை உறுதிப்படுத்தவும், அவர்களின் தாயாருக்கு நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் சிகிச்சை அளித்த மருத்துவர்களை, இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிகளால் சாட்சிகளாகவே விசாரணை செய்யப்படவில்லை. குறைந்தபட்சம் மேற்படி மருத்துவமனைகளில், அசா.1 மற்றும் 2டின் தாயாரை சிகிச்சைக்கு சேர்த்ததற்கான விபத்து பதிவேட்டு ஆவணங்களைக்கூட, இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிகளால் பெற்று, இந்த வழக்கு சம்பந்தமாக தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி மருத்துவமனை மருத்துவர்களை விசாரணை செய்யவில்லை என்பதையும், விபத்து பதிவேட்டு ஆவணங்களைப் பெற்று இந்த வழக்கு சம்பந்தமாக ஆஜர் செய்யப்படவில்லை என்பதையும், அசா.9 தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார். அவ்வாறு மேற்படி மருத்துவர்களை விசாரணை செய்து இவ்வழக்கில் சாட்சிகளாக காட்டப்படாததற்கும், மருத்துவ ஆவணங்களைப் பெற்று சான்றாவணங்களாக தாக்கல் செய்யாததற்கும், எத்தகைய ஏற்புடைய காரணங்களும் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிகள் மூலம் அரசுத்தரப்பில் சொல்லப்படவில்லை.

8 (12). மேலும், இந்த விபத்து சமயத்தில் எதிரி மதுபோதையில் இருந்தார் என்றும் அரசுத்தரப்பில் எவ்வித குற்றச்சாட்டும் இவ்வழக்கின் எதிரிக்கு எதிராக

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.10 17:31:52 +0530

சுமத்தப்படவில்லை. மேற்கண்ட சூழ்நிலையில், சம்பவத்தை கண்ணுறாத அசா.1 மற்றும் 2, இந்த விபத்தில் காயம்பட்டு இறந்துபோன நபர் தங்களது தாயார் என்பதால், விபத்து சமயத்தில் எதிரி குடிபோதையில் இருந்ததுபோலவும், தங்களது தாயார்மீது எதிரி அஜாக்கிரதையாக மோதியதுபோலவும், அவ்வாறு மோதியதில் அவர்களின் தாயாரின் தலைமுடி எதிரி ஓட்டிய இருசக்கர வாகனத்தின் சக்கரத்தில் மாட்டிக்கொண்ட பின்னிட்டும், எதிரி மேற்படி இருசக்கர வாகனத்தை நிறுத்தாமல், தர தரவென இழுத்து சென்றதுபோலவும், அதைப் பார்த்து அங்கிருந்தவர்கள்தான் வண்டியை நிறுத்தி, அசா.1 மற்றும் 2டின் தாயாரின் தலைமுடியை கட் செய்தது போலவும், இந்த வழக்கின் விபத்தை மிகைப்படுத்தி தவறாக சாட்சியமளித்துள்ளார்களா ? என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. எனவே, இந்த விபத்திற்கு எதிரிதான் காரணம் என அளித்த, அசா.1 மற்றும் 2டின் சாட்சியங்கள் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக ஏற்புடையதில்லை என இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது.

8 (13). அசா.8 சாட்சியமளித்ததுபோல, அசா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த அசாஆ.1 ஆன புகாரின் அடிப்படையில்தான், இந்த குற்றமுறையீட்டு காவல் நிலையமான நாகூர் காவல் நிலையத்திற்கு, இந்த விபத்து குறித்து முதன் முதலாக தகவல் வந்தது என்பதும், அதனடிப்படையில் அசாஆ.2 ஆன இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்பதும் தவறானது. இந்த விபத்தானது நாகூர் காவல் நிலையத்தின் அருகிலேயே அரைக் கிலோ மீட்டர் தூரத்தில்,

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.10 17:31:59 +0530

நாகூரிலிந்து, நாகப்பட்டினம் செல்லும் மெயின்ரோட்டில் கடைகளும், வீடுகளும் இருக்கும் மக்கள் நடமாட்டமுள்ள இடத்தில் பட்டப்பகலில் நடைபெற்றது. அவ்வாறு இவ்விபத்து நடைபெற்றதால், உடனடியாக காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்து, அவர்கள்தான் சம்பவ இடம் வந்து போக்குவரத்தை சரிசெய்தார்கள். காயம்பட்டவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். விபத்து குறித்தும் விசாரித்து தெரிந்துகொண்டார்கள். எதிரியையும், அப்போதே விபத்து நடந்த இடத்தில் இருந்து வாகனத்துடன் காவல் நிலையம் கொண்டுவந்துவிட்டார்கள். ஆனால் அதையெல்லாம் மறைத்து, இறந்துபோன நபரின் குடும்பத்திற்கு இழப்பீடு கிடைக்க வேண்டும் என்பதற்காக, இவ்வழக்கின் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையானது, வழக்கிற்காக பின்னிட்டு உருவாக்கப்பட்டது என எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் வாதிட்டுள்ளார்.

8 (14). இந்நிலையில், இவ்வழக்கின் முதல் புலன் விசாரணை அதிகாரியான அசா.9தே, தனது குறுக்கு விசாரணையில், **"இவ்விபத்தானது எங்கள் காவல் நிலையத்தில் இருந்து சுமார் 500 மீட்டர் தூரத்திற்குள்தான் நடைபெற்றது. சம்பவமானது பட்டப்பகலில், கடைகள் மற்றும் வீடுகள் நிறைந்த நாகூரிலிருந்து நாகப்பட்டினம் செல்லும் மெயின்ரோட்டில்தான் நடைபெற்றது. சம்பவம் குறித்து உடனடியாக தகவல் அறிந்து, நாகூர் காவல் நிலைய போலீசார் போக்குவரத்தை சரிசெய்யவும், காயம்பட்ட நபரை மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கவும் சம்பவ இடம் சென்றுவிட்டனர். ஆனால் அதனடிப்படையில், இவ்வழக்கில் முதல் தகவல்**

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.10 17:32:06 +0530

**அறிக்கை பதிவு செய்யவில்லை"** என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். இவ்வழக்கின் புகாரினை பெற்று முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ததாக சொல்லப்படும் அசா.8டிடம், அது குறித்து எதிரி தரப்பில் வினாவப்பட்டதற்கு, அதனை அவர் மறுக்கவில்லை. மாறாக, அவர் இந்த விபத்தானது, எங்களது காவல் நிலையத்தில் இருந்து 500 மீட்டர் தூரத்தில் மெயின்ரோட்டில்தான் நடைபெற்றது. ஆனால் இந்த விபத்து குறித்து உடனடியாக தகவல் வந்து, நாங்கள் சம்பவ இடத்திற்கு சென்றோமா ? என்று எனக்கு ஞாபகம் இல்லை என முரண்பட்ட வகையில் சாட்சியமளித்துள்ளார்.

8 (15). இவ்வழக்கின் புகாரினை பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக சொல்லப்படும் அசா.8தான், மேற்படி ஆவணங்களை உடனுக்குடன் எந்தவித காலதாமதமுமின்றி, நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். ஆனால் கடந்த 06.10.2018 ஆம் தேதி மாலை 03.30 மணியளவில் நடந்த, இந்த விபத்து குறித்து உடனடியாக வழக்கு பதிவு செய்யப்படவில்லை. அன்று இரவு 10.00 மணியளவில், அசா.8டிடம் நிலையம் ஆஜராகி அசாஆ.1 ஆன புகாரினை அசா.1 கொடுத்ததாகவும், அதனடிப்படையில், அசாஆ.2 ஆன இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையை அசா.8 பதிவு செய்ததாகவும் அரசுதரப்பில் சொல்லப்பட்டுள்ளது. அவ்வாறு அசா.8 ஆல் பதிவு செய்யப்பட்டதாக சொல்லப்படும் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையானது, உடனடியாக அருகிலேயே உள்ள நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்படவில்லை. மாறாக, நான்கு நாட்கள் கழித்து காலதாமதமாக, கடந்த 10.10.2018 ஆம் தேதி பகல் 11.20 மணியளவில் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு காலதாமதமாக

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.10 17:32:13 +0530

ஆஜர் செய்யப்பட்டதற்கு, அசா.8டின் மூலம் எத்தகைய ஏற்புடைய விளக்கங்களையும் அரசுத்தரப்பில் சொல்லப்படவில்லை. அசா.8டே, இவ்வழக்கின் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை, நீதிமன்றத்திற்கு நான் அனுப்பி வைக்கவில்லை. அசாஆ.1 ஆன புகாரினை பெற்று அதில் இவ்வழக்கினை பதிவு செய்ததற்கான, அதில் உள்ள மேலொப்பத்தினை நான் எழுதவில்லை. அந்த மேலொப்பத்தினை நான் எழுதியதுபோல, யார் எழுதினார்கள் ? என்று எனக்கு தெரியாது என மேற்படி ஆவணத்திற்கு எதிராகவும், அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராகவும் சாட்சியமளித்துள்ளார். மேற்கண்ட சூழ்நிலையில், அசா.8 சாட்சியமளித்ததுபோல, அவர் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தாரா ?, இந்த விபத்து குறித்து ஏற்கனவே கிடைக்கப் பெற்ற உண்மை விவரத்தை மறைத்து, எதிரி தரப்பில் சொல்லப்பட்டதுபோல, பின்னிட்டு உருவாக்கப்பட்ட புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையில், அவர் இவ்வழக்கினை பதிவு செய்ததுபோல, வெறும் கையெழுத்து மட்டும் போட்டாரா ? என்ற சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது. எனவே, அசா.8டின் சாட்சியமும் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக ஏற்புடையதில்லை என இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது.

8 (16). அசா.9 ஆன இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியே, தனது குறுக்கு விசாரணையில், **"நான் புலன் விசாரணை மேற்கொண்ட வகையில், சம்பவத்தை கண்ணுற்றதாக அசா.3 சந்துரு, அசா.4 சேகர், அசா.5 சுஜய், அசா.6 வீரச்செல்வன் ஆகியோர்களை சாட்சிகளாக காட்டியுள்ளேன். அவர்கள் என்னிடம் அளித்த குவிமுச.**

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.10 17:32:20 +0530

**பிரிவு 161(3)றின் படியான வாக்குமூலங்களில், இந்த விபத்தில் காயம்பட்டு இறந்துபோன வசந்தா என்ற ஓர் அம்மாதான், திடீரென சாலையின் குறுக்கே வந்தபோது இந்த விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனம்மோதி அடிப்பட்டு கீழே விழுந்துவிட்டார் என சொல்லியுள்ளார்கள்"** என்று ஒப்புக்கொண்டுள்ளார். அவ்வாறு ஒப்புக்கொண்ட அசா.9திடம், சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லி, தாங்கள் விசாரித்த சாட்சியங்கள். தங்களிடம் மேற்கண்டவாறுதான் விபத்து ஏற்பட்டதாக வாக்குமூலம் அளித்துள்ள சூழ்நிலையில், இந்த விபத்தில் காயம்பட்டு இறந்துபோன வசந்தா, சாலையின் இடதுபுற ஓரமாக சென்றதாகவும், அவர் மீது இருசக்கர வாகனம் மோதியதாகவும், எதனடிப்படையில் இவ்வழக்கின் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது ? என்று எதிரி தரப்பில் வினாவப்பட்டது. அதற்கு அசா.9 அதுபற்றி என்னால் கூற இயலாது. காவல் ஆய்வாளர் ராதாகிருஷ்ணன் என்பவர்தான் குற்ற அறிக்கையை தாக்கல் செய்தார். அதனால் அதுபற்றிய விவரம் அவருக்குத்தான் தெரியும் என சாட்சியமளித்துள்ளதை கவனிக்க வேண்டியது அவசியமாகின்றது.

8 (17). மேலும் அசா.9தே, கடந்த 06.10.2018 ஆம் தேதி இவ்வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்காக பெற்றுக்கொண்ட நான், கடந்த 15.10.2018 ஆம் தேதிக்கு பின்னர்தான், இவ்வழக்கு கோப்பினை தொடர் புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் ராதாகிருஷ்ணனிடம் ஒப்படைத்தேன் என ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால் மேற்படி காவல் ஆய்வாளர் ராதாகிருஷ்ணன். கடந்த 06.10.2018 ஆம் தேதியே அசா.8 ஆன சிறப்பு உதவி ஆய்வாளர் மோகனையும், கடந்த 07.10.2018 ஆம் தேதியே

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.10 17:32:27 +0530

மருத்துவர் திரு. அருண்குமார் என்பவரையும் விசாரணை செய்து அவர்களின் குவிமுச. பிரிவு 161(3)றின் படியான வாக்குமூலங்களை பதிவு செய்ததுபோல, இவ்வழக்கின் மேற்கண்ட சாட்சிகளின் வாக்குமூலங்கள் உருவாக்கப்பட்டுள்ளது என்பதையும், அசா.9 தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார். மேற்கண்ட சூழ்நிலையில், மேற்படி சாட்சிகளின் வாக்குமூலங்கள் எவ்வாறு உருவாக்கப்பட்டது ? என்பது குறித்தும், அரசுத்தரப்பில் எத்தகைய ஏற்புடைய விளக்கங்களும் சொல்லப்படவில்லை. மேலும் அசா.9தே, இவ்வழக்கின் பார்வை மகசர், சாட்சிகளின் குவிமுச. பிரிவு 161(3)னின் படியான வாக்குமூலங்கள் ஆகியவைகள் அனைத்தும் நிலையத்தில் வைத்து, காவல் நிலைய கணினியில் CCTNS ஐ பராமரிக்கும் காவலர் தயார் செய்துள்ளார். அந்த ஆவணங்கள் அனைத்தும் இவ்வழக்கின் குற்ற அறிக்கையுடன், காலதாமதமாகத்தான் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 1 முதல் 9 வரையிலான பட்டியல் சாட்சிகளை, நான் எந்த தேதியில் விசாரணை செய்து அவர்களின் குவிமுச.பிரிவு 161(3)றின் படியான வாக்குமூலங்களை பதிவு செய்தேன் ? என்று அதில் தேதி விவரங்கள் குறிப்பிடப்படவில்லை என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளார். பார்வை மகசர் சாட்சியான அசா.7ம், அசாஆ.3 ஆன இவ்வழக்கின் பார்வை மகசரில் உள்ள சாட்சி கையெழுத்து தன்னுடையதே இல்லை என்றும், இவ்வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், தன்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றும், இந்த விபத்து குறித்து தான் கேள்விப்படக்கூட இல்லை என்றும், அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார். மேற்கண்ட அவரது சாட்சியத்தை பார்க்கின்றபோது, எதிரி

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.10 17:32:34 +0530

தரப்பில் சொல்லப்படுவதுபோல, விபத்து குறித்து ஏற்கனவே கிடைக்கப்பெற்ற உண்மைத் தகவலை மறைத்து, தயார் செய்யப்பட்ட புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கைக்கு ஆதரவாக பார்வை மகசர் உள்ளிட்ட, சாட்சிய வாக்குமூலங்களையும், நிலையத்தில் வைத்து பின்னிட்டு தவறாக உருவாக்கப்பட்டதா ? என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

8 (18). இவ்வாறு இவ்வழக்கில், இந்த விபத்திற்கு எதிரிதான் காரணம் என்பதை உறுதிப்படுத்த, சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லி அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட, அசா.3 முதல் 6 வரையிலான சாட்சிகளின் சாட்சியம், அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக அமைந்துள்ளது. இந்நிலையில், சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லி வேறு எந்த சாட்சிகளையும், அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்படவில்லை. பார்வை மகசர் சாட்சியான அசா.7ம், அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார். சம்பவம் குறித்து கேள்விப்பட்டதாக சொல்லப்படும் அசா.1 மற்றும் 2 ஆகிய சாட்சிகளின் சாட்சியமும், அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக ஏற்புடையதாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு கண்டுள்ளது. அதேபோல அசா.8டின் சாட்சியமும் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக ஏற்புடையதில்லை என இந்நீதிமன்றம் முடிவு கண்டுள்ளது. அசா.9தே, தன்னிடம் சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லி, தான் விசாரணை செய்த அசா.3 முதல் 6 வரையிலான சாட்சியங்கள், இந்த விபத்தில் காயம்பட்டு இறந்துபோன நபர்தான் திடீரென சாலையின் குறுக்கே வந்து, இருசக்கர வாகனத்தில் மோதி

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.10 17:32:41 +0530

விழுந்துவிட்டார் என குவிமுச. பிரிவு 161(3)றின் படியான வாக்குமூலங்கள் அளித்ததாகவும், அவ்வாறு இருந்தும் எதனடிப்படையில், இவ்வழக்கின் குற்ற அறிக்கையை எதிரிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டது ? என்று தனக்கு தெரியாது என்றும் இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்துள்ளார். இவ்வழக்கின் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை உள்ளிட்ட இவ்வழக்கு ஆவணங்கள் அனைத்தும், விபத்து குறித்து, ஏற்கனவே கிடைக்கப் பெற்ற உண்மைத் தகவலை மறைத்து வழக்கிற்காக பின்னிட்டு தவறாக உருவாக்கப்பட்டனவா ? என்ற சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. மேற்கண்ட சூழ்நிலையில், மேற்கண்ட அரசுத்தரப்பு சாட்சிய, சான்றாவணங்களை பார்க்கின்றபோது, அரசுத்தரப்பில் சொல்லப்பட்டதுபோல, இந்த விபத்து சம்பவம் நடைபெற்றதா ?, என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. எதிரி தரப்பில் அசா.1 மற்றும் 2டின் தாயாரான மேற்படி வசந்தா, சாலையின் குறுக்கே திடீரென வந்ததால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என அசா.9 ஆன முதல் புலன் விசாரணை அதிகாரியின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், மாண்புமிகு உச்சநீதிமன்றம் MAHADEO Vs. State of Maharastra 1972 CrlJ49 என்ற வழக்கில்,

> ***"However when a pedestrian suddenly crosses a road without taking note of the approaching bus there is every possibility of his dashing against the bus without the driver being aware of it. The bus driver cannot save accident, however slowly he may be driving and, therefore, he cannot be held to be negligent in such a case".***

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.10 17:32:48 +0530

என்று சொல்லப்பட்டுள்ள சட்ட வழிகாட்டுதலையும், எதிரி தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட, மேற்படி முன் தீர்ப்பில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள சட்ட வழிகாட்டுதலையும் பார்க்கின்றபோது, மேற்கண்ட வழக்குச் சூழ்நிலையில், இந்த விபத்திற்கு இவ்வழக்கின் எதிரி காரணமாகமாட்டார் என இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது. எனவே, எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களானது அரசுத்தரப்பால் நியாயமான சந்தேகங்களுக்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது.

9. **முடிவில்,**

**எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களானது, அரசு தரப்பால் நியாயமான சந்தேகங்களுக்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என தீர்வு காணப்பட்டிருப்பதால், இவ்வழக்கின் எதிரியை இதச பிரிவுகள் 279, 304(A)ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானிக்கப்படுகிறது. எனவே, இவ்வழக்கின் எதிரியை இதச பிரிவுகள் 279, 304(A)ன் கீழான குற்றச்சாட்டுக்களில் இருந்து, குவிமுச. பிரிவு 255(1)/ u/s.278(1) of BNSS, 2023ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகிறது.**

10. எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பிணையப்பத்திரமானது மேல்முறையீடு அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் தானே ரத்தாகும் என இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.10 17:32:55 +0530

11. இவ்வழக்கு சம்பந்தமாக வழக்குச் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, வழக்குச் சொத்துப்பற்றிய உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஜூலை மாதம் 10 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.10 17:33:03 +0530

**தலைமை நீதித்துறை நடுவர்,**

**நாகப்பட்டினம்.**

**இணைப்பு** -

**சாட்சியப்பட்டியல்**

**அரசு தரப்பு சாட்சிகள்** :-

| **வரிசை எண்.** | **சாட்சிகளின் பெயர்** |
|---|---|
| அ.சா.1 | திரு. ராமன். |
| அ.சா.2 | திரு. ரவீந்தர் |
| அ.சா.3 | திரு. சந்துரு. |
| அ.சா.4 | திரு. சேகர். |
| அசா.5 | திரு. சுஜய். |
| அசா.6 | திரு. வீரசெல்வன் |
| அசா.7 | திரு. ஸ்ரீதர். |

| | |
|---|---|
| அசா.8 | திரு. மோகன் (சிறப்பு உதவி ஆய்வாளர்) |
| அசா.9 | திரு. செந்தில்குமார் (காவல் ஆய்வாளர்) |

**எதிரி தரப்பு சாட்சிகள் :**- இல்லை.

**சான்றாவணப்பட்டியல்:**

**அரசு தரப்பு சான்றாவணங்கள்** :-

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | -- | புகார் - அசல் |
| அ.சா.ஆ.2 | 06.10.2018 | முதல் தகவல் அறிக்கை - அசல். |
| அ.சா.ஆ.3 | 07.10.2018 | பார்வை மகசர் - அசல் |
| அ.சா.ஆ.4 | -- | மாதிரி வரைபடம் - அசல். |
| அ.சா.ஆ.5 | 07.10.2018 | பிரேத விசாரணை அறிக்கை - அசல். |
| அ.சா.ஆ.6 | 25.10.2018 | PY 02 Q 5304 என்ற பதிவெண்கொண்ட இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை - அசல் |
| அ.சா.ஆ.7 | 07.10.2018 | வசந்தாவின் சடலக்கூறாய்வு அறிக்கை - அசல். |

**எதிரி தரப்பு சான்றாவணங்கள் :-** - இல்லை.

**சான்றுப்பொருள் பட்டியல் :**

**அரசுத்தரப்பு சான்று பொருட்கள்:-** இல்லை.

**எதிரி தரப்பு சான்று பொருட்கள் :-** இல்லை.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.10 17:33:10 +0530

**தலைமை நீதித்துறை நடுவர்,**

**நாகப்பட்டினம்.**

**<u>குறிப்பு</u>**

1 எதிரி பிணையிலிருந்து ஆஜரானார்.

2 சாட்சிகள் யாரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்திவைக்கப்படவில்லை.

3 எதிரியை குற்றவாளி இல்லை என தீர்மானித்து விடுதலை செய்யப்பட்டது.

4 தீர்ப்பு பற்றி சிறு குறிப்பு குற்ற முறையீட்டு காவல் நிலையத்தாருக்கு தெரிவிக்கப்பட்டது.

5 தீர்ப்பின் நகல் மாண்புமிகு நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

6 எதிரிக்கு அபராதம் விதிக்கப்படவில்லை.

7 தீர்ப்பு நாள்.10.07.2026.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.07.10 17:33:18 +0530

**தலைமை நீதித்துறை நடுவர்,**

**நாகப்பட்டினம்.**